02.03.2026

OS No: 68/2013

பி.வா.சா. 1 திரு. சேகர் த/பெ முத்தணன்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

______அறக்கட்டளை 1999 ல் ஆரம்பிக்கப்பட்டு 2000 ஆம் வருடத்தில் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆரம்பத்தில் 40 மாணவர்களுடன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2006 ஆம் வருடத்தில் நானும் எனது மனைவியும் அறக்கட்டளையில் உரிப்பினராக சேர்ந்தோம் என்றால் சரியதான். பள்ளியின் நிர்வாகத்தில் 2006 முதல் 2012 வரை இருந்தேனா என்றால் நான் இருந்தேன். மேற்படி அறக்கட்டளை மற்றும் பள்ளியின் அன்றாட நடவடிக்கையில் நான் Acting Member ஆகவே செயல் பட்டு வந்தேன் என்றால் சரிதான். அறக்கட்டளையில் நடைபெற்ற கூட்டங்களில் நான் 2006 முதல் 2012 வரை கலந்து கொண்டேனா என்றால் கூட்டங்களில் கலந்து கொண்டேன் . 2006 முதல் 2012 வரை பள்ளி மற்றும் அறக்கட்டளை நிர்வாகத்தின் தலைமை யார் பார்த்து வந்தார் என்றால் 2012 ஆம் வருடம் நான் தலைமை பொறுப்பை பார்த்தேன் அதற்கு முன்பு எல்லோரும் சேர்ந்து தலைமை பொறுப்பினை பார்த்தோம். 2012 ஆண்டில் நான் பொறுப்புக்கு வந்த கால கட்டத்தில் 3000 மாணவர்கள் எண்ணிக்கை கொண்டதாக பள்ளி செயல்பட்டு வந்ததது என்றால் சரிதான். 2009 ஆம் வருடத்தில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்துவதற்கான மையமாக சாம்பவிகா பள்ளி இருந்தது என்றால் சரிதான். 2011 ஆம் வருடத்தில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்துவதற்கான மையமாக சாம்பவிகா பள்ளி இருந்தது என்றால் சரிதான். சாம்பவிகா பள்ளியில் அந்த பள்ளியை தவிர அருகில் இருக்கும் பள்ளியை சேர்ந்த மாணாக்கர்களும் மேற்படி பொதுத் தேர்வினை எழுதிட வருவார்கள் என்றால் சரிதான். 2006 முதல் 2012 ஆம் வருடம் வரைசாம்பவிகா பள்ளியின் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதமானது 100 சதவீதம் என்றால் ஒரு சில வருடங்கள் மேற்படி 100 சதவீதம் இருந்தது. நான் பள்ளியின் நிர்வாகத்திற்கு 2012 ஆம் வருடத்தில் வருவதற்கு முன்பு நர்சரி பள்ளிக்கு

தனி கட்டிடம் இருந்தது என்றால் இல்லை. நான் பள்ளியின் நிர்வாகத்திற்கு 2012 ஆம் வருடத்தில் வருவதற்கு முன்பு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிக்கு முதல் தளம் மற்றும் 2 ஆம் தளம் கொண்ட 5 கட்டிடங்கள் இருந்தது என்றால் இல்லை. நான் பள்ளியின் நிர்வாகத்திற்கு 2012 ஆம் வருடத்தில் வருவதற்கு முன்பு கணினி பயில்வதற்காக ஒரு கட்டிடமானது Lab ஆக இருந்ததா என்றால் ஒரு கட்டிடம் என தனியாக இல்லை ஒரு வகுப்பறையானது அதற்கென இருந்தது. அறிவியல் துறைக்காக தனியாக ஒரு lab இருந்ததா என்றால் கணினிக்கான வகுப்பறை போல் மேற்படி துறைக்கும் இருந்தது. மாணவர்களின் பெற்றோர்கள் வந்து அமர்வதற்கும் மாணவர்கள் சாப்பிடுவதற்கும் 80 அடி நீளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சீட் அமைந்து ஒரு கட்டிடம் இருந்ததா என்றால் இல்லை. பள்ளிக்குள் நுழையும் இடத்தில் ஏற்கனவே ஒரு விநாயகர் கோவில் ஒன்று உள்ளது என்றால் 2006 ஆம் வருடத்தில் நான் நிர்வாகத்திற்கு வந்த பிறகு தான் மேற்படி கோவில் கட்டப்பட்டது. அறக்கட்டளையின் By law ல் உள்ள விதிமுறைகளின் அறக்கட்டளையின் வரவு செலவுகளை வைத்து வர குறிப்பிட்ட வங்கி விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. By law வின் படி தனிநபரின் பெயரில் வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அறக்கட்டளையின் வரவு செலவு மேற்கொள்ளக்கூடாது என விதி உள்ளது என்றால் சரிதான். நான் பள்ளி நிர்வாகத்திற்கு தலைமை பொறுப்பு ஏற்ற போது 2012 க்கு முன்பு செயல்பாட்டில் இருந்த வங்கி கணக்குகள் தற்போதும் செயல்பாட்டில் உள்ளதா என்றால் சில காலம் செயல்பாட்டில் இருந்தது தற்போது இல்லை. நான் மேற்படி தலைமை பொறுப்பிற்கு வந்த பிறகு ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த வங்கி கணக்குகள் முடித்து வைக்கப்பட்டு எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் தனியாக வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு பள்ளியின் வரவு செலவு செய்யப்படுகிறது என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் முதல் எனது பெயரில் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன் என்றால் கடந்த 10 வருடங்களாக செலுத்தி வருகிறேன். சாம்பவிகா பள்ளி அறக்கட்டளையின் விபரங்களானது எனக்கு 2006 ஆம் வருடம் முதல் தான்

தெரியவந்ததா என்றால் 2006 ஆம் வருடம் முதல் தான் தெரியவந்தது. அறக்கட்டளையின் உறுப்பினர்களாக இருந்த மலர்வேணியின் கணவர் சுரேஸ், பாலமுருகன் , முத்துக்கண்ணன் , கணேசன், சரவணன் ஆகியோர் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் ஆவதற்கு முன்பு கே.ஆர் மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர்கள் என்றால் சரிதான். காசி தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். மேற்படி நிர்வாகத்திற்கு வருவதற்கு முன்பு எனக்கு கற்பித்தல் குறித்த முன் அனுபவம் இல்லை என்றால் சரிதான். எனது மனைவிக்கும் கற்பித்தல் குறித்த முன் அனுபவம் இல்லை என்றால் சரிதான். 2006 ல் முத்துக்கண்ணன் , கணேசன், சரவணன் ஆகியோர் அறக்கட்டளையில் இருந்து விலகியதிற்கும் ஒரு திருத்தல் பத்திரம் ஒன்றும் பின்பு நான், எனது மனைவி மற்றும் பாரதிதாசன் ஆகியோர் உறுப்பினராக சேர்ந்ததற்கு திருத்தல் பத்திரம் ஒன்றும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பழைய உறுப்பினர்களை அறக்கட்டளையில் இருந்து நீக்குவதற்கும் புதிய உறுப்பினர்களாக எங்களை சேர்த்ததற்கும் அறக்கட்டளையில் கூட்டம் கூடி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் கூட்டம் கூடி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சொன்னார்கள். அறக்கட்டளை By law வின் விதி 17 ன் படி நான் உறுப்பினராக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். 12.06.2006 ஆம் தேதி ஆவண எண் 91/2006 ன் படி திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் தேதி நியாபகம் இல்லை. மேற்படி திருத்தல் பத்திரித்தில் புதிதாக சேர்ந்த உறுப்பினர்களான நாங்களும் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்து உறுப்பினர்களாக தொடரும் நபர்களும் அதில் சார்பதிவாளர் முன்பாக கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அறக்கட்டளையில் டிரஸ்டியாக நாங்கள் சேர்வதற்கு ஏதேனும் பங்களிப்பு செய்தோமா என்றால் அறக்கட்டளை விதிப்படி ஒவ்வொருவரும் தலா ரூ.1000/- கொடுத்தோம். விலகி சென்ற மூவருக்கும் தலா ரூபாய் எட்டு இலட்சம் வீதம் (மொத்தம் 24 இலட்சம்) நாங்கள் அவர்களுடைய நன்மதிப்பிற்காக கொடுத்தோம். மேற்படி ரூபாய் 24 இலட்சம் விலகி சென்ற உறுப்பனிர்களுக்கு கொடுக்கப்பட்டது குறித்து ஆவண எண் 91/2006 ல் சங்கதி

சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி தொகை கொடுக்கப்பட்டதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2006 முதல் 2012 வரையிலான இடைப்பட்ட காலத்தில் அறக்கட்டளையின் தலைவர் , செயலாளர், பொருளாளர் போன்ற ஏதேனும் ஒரு பதவியில் நான் இருந்துள்ளேனா என்றால் இல்லை. அறக்கட்டளையின் bye - law வில் தலைவர் , செயலாளர், பொருளாளர் ஆகியோர் எவ்வாறு தேர்வு செய்யப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலைவர் , செயலாளர், பொருளாளர் ஆகியோர் ஒரு முறை தேர்வு செய்யப்படும் போது அவர்களது பதவி காலம் எத்தனை வருடம் என்றால் ஒரு வருடம். ஒருவர் ஒருமுறை மேற்படி பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட பிறகு மீண்டும் அதே பொறுப்பிற்கு எத்தனை வருடம் கழித்து போட்டியிட முடியும் என்றால் Bye – law வில் உள்ளது எனக்கு அது நியாபகம் இல்லை. தலைவர் , செயலாளர், பொருளாளர் பதவியில் ஒரு நபர் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது என Bye – law வில் உள்ளது என்றால் சரிதான். நான் 2012 - 2013 நிதி ஆண்டிற்கு அறக்கட்டளைக்கு தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். 2012 -2013 நிதி ஆண்டிற்கு அறக்கட்டளைக்கு செயலாளர் யார் என்றால் ராணி என்பவர் ஆவார். 2012 -2013 நிதி ஆண்டிற்கு அறக்கட்டளைபொருளாளர் யார் என்றால் மலர்வேணி என்பவர் ஆவார். அறக்கட்டளையின் bye – law படி 6 நபருக்கு மிகாமல் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றால் சரிதான். அறக்கட்டளையின் உறுப்பினர்கள் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தான் தேர்வு செய்யப்பட முடியும் என்றால் சரிதான். அறக்கட்டளையின் நிதியை அறக்கட்டளையின் bye – law வின் யார் நிர்வகிக்க முடியும் என்றால் நியாபகம் இல்லை. Bye – law வின் விதி 24 ன் படி ரூ5000/- க்கு மேல் ஒருமாதத்தில் செலவு செய்ய வேண்டும் என்றால் உறுப்பினர்களின் அனுமதி வேண்டும் என்றால் நியாபகம் இல்லை. சாம்பவிகா பள்ளிக்கு Educational Agency உள்ளதா என்றால் இல்லை. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்ட விதி 24 ன் படி பள்ளி கமிட்டி ஒன்று அமைக்க வேண்டும் என்றால் நாங்கள் வருவதற்கு முன்பு இருந்தே மேற்படி கமிட்டி இல்லை அதனால் நாங்களும் மேற்படி கமிட்டியினை

ஏற்படுத்தவில்லை. நான் 23.08.2012 முதல் 22.08.2015 வரை 3 வருடங்களாக சாம்பவிகா அறக்கட்டளையின் பள்ளி செயலாளராக இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி காலக்கட்டத்திற்கு நான் பள்ளி கமிட்டிக்கு ஒப்புதல் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பள்ளியில் இருந்தோ அறக்கட்டளையில் இருந்தோ எனக்கு மாத வருமானம் கிடைக்க பெற்றதா என்றால் இல்லை. பள்ளியின் நிர்வாகத்தினை தவிர 2012 முதல் தற்போதைய வருடம் வரை எனக்கு வேறு தொழில் ஏதும் இல்லை என்றால் சரியல்ல விவசாயம் உள்ளது. என்ன விவசாயம் என்றால் 75 ஏக்கரில் மா, தென்னை போன்ற விவசாயம் செய்து வருகிறேன். நான்குறிப்பிடும் சொத்தானது சிவகங்கையில் இருந்து 25 கி.மீ தள்ளி உள்ள மேலமங்கலத்தில் உள்ளது என்றால் சரிதான். பள்ளி வருமானத்தில் இருந்து நான் சொத்துக்களை என் பெயரிலும் என் மகன்கள் மனைவி பெயரில் வாங்கியதாக சொல்லப்படுகிறது என்றால் நான் 15 வருடங்களுக்கு மேலாபக வெளிநாட்டில் வேலை பார்த்து அதன் வருவாயைக் கொண்டு சொத்துக்கள் வாங்கியுள்ளேன் பள்ளி வருமானத்தில் இருந்து எந்த சொத்துக்களும் வாங்கவில்லை. 1995-1996 வரை கார்த்திகேயா ஏஜென்சி பர்னிச்சர் மார்ட் என்ற பெயரில் கடை ஒன்று நடத்தி வந்தேன் என்றால் சரிதான். நான் மும்பையில் சில காலம் இருந்தேன் என்றால் சரிதான். நான் வெளிநாட்டிலும் மும்பையிலும் இருந்த காலக்கட்டத்தில் காசி என்பவருக்கு எனது பொருளாதாரம் குறித்து கடிதங்கள் எழுதியுள்ளேனா என்றால் எழுதியிருக்கலாம். சாம்பவிகா பள்ளியினை சுற்றி 40 ஏக்கர் இடமானது 2012 க்கு பிறகு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பையூர் பிள்ளை வயல் ஆர்ச் அருகே வணிக வளாகங்க கட்டிடத்துடன் கூடிய வீடு ஒன்று கட்டியுள்ளேன் என்றால் வீடு உள்ளது கீழே உள்ள இடத்தில் கடைகள் கட்டி உள்ளேன். மறவமங்கலத்தில் கல்யாண மண்டபம் உள்ளது என்றால் சரிதான். மதுரையை ஒட்டி வீட்டு மனைகள் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. 2012 முதல் 2015 காலகட்டத்தில் பள்ளியின் பொருளாளராக 3 ஆம் வாதி மலர்வேணி இருந்தார் என்றால் சரிதான். நான் எனது அலுவலக உதவியாளர் மூலம் வெற்று காசோலையில் மலர்வேணியிடம் கையெழுத்து செய்து தருமாறு கேட்க

அதை அவர் மறுத்துவிட்டார் என்பதற்காக தான் எனக்கும் மலர்வேணிக்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் முதன்மையான பரிகாரமானது 2 மாதத்திற்கு ஒருமுறை அறக்கட்டளையின் கூட்டம் கூட்ட பட வேண்டும் என்பது என்றால் சரிதான். IA No 410/2013 என்ற இடை மனுவானது உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான் மேற்படி உத்தரவிற்கு எதிராக சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுவினை நாங்கள் தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரிவின் அடிப்படையில் கூட்டம் கூட்டப்படவில்லை என்றால் சரியல்ல கூட்டம் கூட்டப்படுகிறது. மேற்படி கூட்டம் குறித்து வாதிகளுக்கு தகவல் சொல்லப்படுமா என்றால் தொலைபேசி மூலமாகவும் அலுவலக உதவியாளர் மூலமாகவும் தகவல் சொல்லப்படும் கூட்டத்திற்கு வரும் வாதிகள் கூட்டத்தில் பிரச்சனைகள் தான் செய்து வாந்தார்கள் இருந்த போதும் நடைபெறும் கூட்டத்திற்கு அவர்களுக்கு தகவல் சொல்லிவிடுவோம். bye - law படி உறுப்பினர் கூட்டத்திற்கு உறுப்பினர் வருகைக்கு பதிவு தபால்மூலம் தகவல் சொல்லப்பட வேண்டும் என விதிமுறைகள் உள்ளன என்றால் சரிதான். அறக்கட்டளையின் bye-law வின் படி அறக்கட்டளையின் முகவரி சிவகங்கை டவுன் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வீடு என்றால் மேற்படி வீட்டில் அறக்கட்டளை கூட்டம் கூட்டப்படுவதில்லை அது நான் குடியிருந்த வீடாகும். பள்ளிக்கான மாணவர் கட்டணமானது உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட குழு சொன்ன படி தான் வசூலிக்கப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி குழு சொன்ன மாணவர்களுக்கான கட்டண விகிதம் எங்களது

பள்ளிக்கு எவ்வளவு என்பதனை காட்டிட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். எனது பள்ளிக்கான மாணவர்களின் கட்டணமானது வங்கி கணக்கு மூலமான பெறப்படுகிறது என்றால் நேரடியாகவும் பெறப்படும் வங்கியின் மூலமாகவும் பெறப்படும். எங்களது பள்ளியில் மாணவர்களின்

பள்ளி கட்டணம் எவ்வாறு பெறப்படுகிறது என்றால் மொத்தமாகவும் கட்டலாம் இரு தவணையாக (TERM) கட்டலாம். 2012 - 2015 வரை காலக்கட்டத்திற்கான எங்கள் பள்ளியில் பயிலும் நர்சரி முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கல்விக் கட்டணம் வசூல் செய்தது குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பள்ளி குழந்தைகள் பெற்றோர்களின் சார்பாக சுப்பிரமணி என்பவர் 2013 ஆம் வருடம் எங்கள் பள்ளி அரசு நிர்ணயம் செய்த கட்டணத்தினை விட அதிகமாக தொகை வசூல் செய்வதாக சொல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியின் குழந்தை யாரும் எங்கள் பள்ளியில் படிக்கவில்லை அவர் காசியின் உறவினர் ஆவார். 2 மாதத்திற்கு ஒருமுறை அறக்கட்டளையின் கூட்டத்தினை கூட்ட வேண்டும் என்றும் பள்ளிகளின் மாணவர்களின் கட்டணமானது அரசு நிர்ணயம் செய்த வகையில் வசூலிக்கப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்ட நிபந்தனைகள் படி நாங்கள் செயல்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு முறையான அறிவிப்பு அனுப்பிடாமலும் 2 மாதத்திற்கு ஒருமுறை அறக்கட்டளையின் கூட்டம் கூட்டப்படாமலும் 2012 முதல் நாளது தேதி வரை செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தொலைபேசி மூலமாகவும் அலுவலக உதவியாளர் மூலமாகவும் அறக்கட்டளையின் கூட்டம் குறித்து தகவல் சொல்லி வாதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிகளுக்கும் இடையே எந்த வித பேச்சு வார்த்தையும் இல்லை என்றால் சரிதான். 2012 முதல் நாளது தேதி வரை எங்கள் பள்ளியில் நடைபெறும் விழாக்களிலோ ஆண்டு விழாக்களிலோ கலந்து கொள்ள வாதிகளை நாங்கள் அழைப்பதும் இல்லை வாதிகள் கலந்து கொள்வதும் இல்லை என்றால் சரியல்ல. பள்ளி விழாக்களுக்கான விளம்பர பேனர்களில் எனது பெயர் மற்றும் புகைப்படம் மட்டுமே இருக்கும் என்றால் சரியல்ல உறுப்பினர்கள் என்று இருக்கும் செயலாளர் படமும் பெயரும் மட்டும் குறிப்பிடுவது மரபாகும். அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எங்களது தனிப்பட்ட சொத்தாக நாங்கள் பாவித்து கொள்கிறோம் என்றால் சரியல்ல. Bye-law படி

குறிப்பிட்ட வங்கி கணக்குகளில் பள்ளியின் வரவு செலவுகளை மேற்கொள்ளாமல் எங்களது தனிப்பட்ட வங்கி கணக்குகளில் வரவு செலவுகளை மேற்கொள்கிறோம் என்றால் சரியல்ல. 2012 - 2013 , 2013 - 2014, 2014 – 2015 வரையிலான காலக்கட்டத்திற்கு அறக்கட்டளைக்கு யார் தலைவர் , பொருலாளர், செயலாளராக இருந்தார்கள் என்றால் தலைவராக ராணியும், செயலாளராக நானும், பொருலாளராக மலர்வேணியும் இருந்தோம். அறக்கட்டளைக்கான பொருப்பாளர்களும் பள்ளிக்கான பொருப்பாளர்களும் ஒரே நபர்களா என்றால் இல்லை அறக்கட்டளையில் இருந்து பள்ளிக்கு செயலாளர் , பொருளாளர் தேர்வு செய்யப்படுவார்கள். 2012 - 2013 , 2013 - 2014, 2014 – 2015 வரையிலான காலக்கட்டத்திற்கு பள்ளிக்கு யார் பொருலாளர், செயலாளராக இருந்தார்கள் என்றால்செயலாளராக நானும், பொருலாளராக மலர்வேணியும் இருந்தோம். மேற்படி செயலாளர் பொருளாளர் தேர்வு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். 2015 லிருந்து அடுத்த 3 ஆண்டுகளுக்கு அறக்கட்டளை மற்றும் பள்ளிக்கு யார் பொருப்பாளர் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். 2015 லிருந்து அடுத்த 3 ஆண்டுகளுக்கு கூட்டப்பட் கூட்டங்களில் வாதிகள் கலந்து கொண்டார்களா என்றால் இல்லை. பள்ளியின் வருவாயினை நான் தவறாக பயன் படுத்துவதாக சொல்லி எனக்கு எதிராக 1 ஆம் வாதியான காசி என்பவர் சிவகங்கை நீதித்துறை நடுவர் மன்றத்தில் தனிப்புகார்தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் நான் தாக்கல் செய்த முன் ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமின் தாக்கல் செய்து அதில் நிலுவையில் இருந்த காலகட்டத்தில் 9 ஆம் பிரிதிவாதி கார்த்திகேயன் என்பவரை அறக்கட்டளையின் உறுப்பினராக தன்னிச்சையாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. Bye law வின் விதிகளுக்கு முரணாக 9 ஆம் பிரதிவாதியை அறக்கட்டளை உறுப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. பாரதிதாசன் அறக்கட்டளையில் இருந்து விலகியதற்கு திருத்தல் பத்திரம் போடப்பட்டுள்ளதா என்றால் தேவையில்லை

என்பதால் போடவில்லை. 9 ஆம் பிரதிவாதியை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்ப்பதற்கான பத்திரத்தில் யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் நானும் எனது மனைவியும் செய்துள்ளோம். வாதிகளுக்கு தகவல் தெரிவிக்காமல் 9 ஆம் பிரதிவாதியை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் வாதிகள் அறக்கட்டளையின் நடவடிக்கைகள் எதற்கும் வருவதில்லை. நான் காவல் துறை உதவி மூலமாகவும் எனது பணபலம் மற்றும் ஆள் பலம் மூலமாகவும் பள்ளியை கைப்பற்றி மற்ற உறுப்பினர்களை வெளியேற்றி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிவாசா ஆ 1 ல் குறிப்பிட்ட கருப்பையா என்பவர் சுப்பிரமணி என்று அழைக்கப்படுவார் என்றால் சரிதான். மேற்படி பிவாசா ஆ 1 ஆனது எனது செல்வாக்கால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிவாசா ஆ 2 ஆவணமானது வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டது என்றும் அதில் வாதிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்பதால் வாதிகளுக்கு மேற்படி ஆவணம் குறித்து ஏதும் தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி சாம்பவிகா பள்ளிக்கு நாங்கள் நிர்வாகத்திற்கு வருவதற்கு முன்பே அரசு அங்கீகாரம் இருந்தது என்றால் மேற்படி அங்கீகாரம் முறையாக புதுப்பிக்கப்படவில்லை நாங்கள் வந்து தான் அங்கீகாரத்தினை புதுப்பித்தோம். நான் சொல்லும் மேற்படி சங்கதிகள் தவறு என்றும் பிவாசா ஆ 3 ஆவணத்தில் 2007 ஆம் வருடத்தில் 1 ஆம் வாதியால் பள்ளியின் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டது என்றால் மேல்நிலைப்பள்ளிக்குறிய ஆவணமாகும். வாதி பள்ளிக்கான அங்கீகாரத்தினை முறையாக புதுப்பித்துள்ளார் என்றும் நான் அந்த ஆவணத்தினை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பள்ளிக்கான அங்கீகாரத்தினை புதுப்பிக்கவில்லை என்றால் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் அதனால் மாணவர்கள் தேர்வு எழுத இயலாத நிலை ஏற்படும் என்றால் பள்ளியின் அங்கீகாரத்தினை புதுப்பிக்க வில்லை என்பதால் மட்டும் அங்கீகாரம் ரத்தாகிவிடும் போதிய வாய்ப்பு வழங்கப்படும். மேற்படி பள்ளியின் அங்கீகாரத்தினை புதுப்பிக்கவில்லை என்பதற்காக பள்ளி கல்வித் துறை 1 ஆம் வாதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் உள்ளதா என்றால் உள்ளது மேற்படி கடிதம் தேவையில்லை

என்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போன்ற கடிதம் ஏதும் இல்லை என்றும் அது குறித்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசா ஆ 30, 31 ஆவணங்களில் கண்ட புகைப்படங்கள் யாரால் எப்போது எடுக்கப்பட்டது என்றால் தெரியாது பள்ளியில் இருந்தது. இதுபோன்ற படங்கள் நிறைய உள்ளன என்றும் எங்களுக்கு சாதகமான படங்களை மட்டும் தாக்கல் செய்து விட்டு மற்ற படங்களை மறைத்து விட்டோம் என்றால் சரியல்ல. பிவாசா ஆ 23, 24,32,33 ஆவணங்களில் வாதிகள் யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் வாதிகள் யாரும் வரவில்லை என்பதால் கையெழுத்து இல்லை. பிவாசா ஆ 23, 24,32,33 ஆவணங்கள் வழக்கிற்காக நாங்கள் தயார் செய்ததுஎன்றால் சரியல்ல. அதில் குறிப்பிடுவது போன்ற எந்த கூட்டமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.02 14:45:44 +0530